Registered as a Newspaper


கலே, வர்த்தக
வகுப்புகள்
ஆரம்பமாகிவிட்டன,
பொருளியல் - திரு. வரதராஜன் (B.A.)
கணக்கியல் - திரு. ஒலிவேட் (B.Com.)
வர்த்தகவியல் - திரு. கேதீஸ்வரன் (B.Com.)
அளவையியல் - திரு. மனோகரன்
சனி, ஞாயிறு காலே 6.15
VINK
TUITION CENTRE
20, கேசாவில் வீதி, யாழ்ப்பாணம்.


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ.1/=


VINK Tuition Centre
20, கேசாவில் வீதி, யாழ்ப்பாணம்.
G.C.E. O/L 86
விஞ்ஞானம் - திரு. A.M.வரதன்
கணிதம் - திரு. S. ஜெயந்திக் குமார்
ஆங்கிலம் - திரு. S. முருகதாஸ்
தமிழ் - திரு. S. பொன்னுச்சாமி
சமூகக்கல்வி - திரு. S. சண்முகநாதன்
(Spoken English Including Grammer) by Mr. A. Britto



சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மாசி மீ 7 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா ஆகிர் பிறை 9 (19-02-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:80


★ ஈரோஸ் கடத்திய

# பிரிட்டிஷ் பெண்மணி
# நேற்றுமாலே விடுதலே

## ஆயுதம் தாங்கிய இளைஞர்

### காவலுக்கு வர அகதி முகாமில் செஞ்சிலுவை பிரதிநிதியிடம் ஒப்படைப்பு

### பனம் பொருள் பரிசளித்து வழியனுப்பல்

— ந. வித்தியாதரன், வனிதராஜன் —

யாழ்ப்பாணம், பெப். 19

பிரிட்டிஷ் பெண் திருமதி வில்லிஸ் பெனிலோப்பைக் கடத்திச் சென்ற ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஒரு மாத காலத்தின் பின்னர் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் வைத்து விடுவித்தது.

நல்லூரில் உள்ள சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வு முகாம் முன்றலில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரியிடமும், பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளரிடமும் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

திருமதி பெனிலோப் தாம் நடத்தப்பட்ட விதம் குறித்தோ அல்லது தொடர்புடைய வேறு விடயங்கள் குறித்தோ தகவல் தர மறுத்துவிட்டார்.

திருமதி பெனிலோப்புக்கும், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஆகியோருக்கும் பனம் பொருள்களே "ஈரோஸ்" இயக்கத்தினர் அன்பளிப்புச் செய்தனர்.

64 வயது நிரம்பிய வில்லிஸ் பெனிலோப் கடந்த ஜனவரி 11 ஆம் திகதி இலங்கைக்கு வந்தார்.

ஜனவரி 17 ஆம் திகதி முல்லைத்தீவில் வைத்து ஈழப் புரட்சி அமைப்பினால் அவர் கடத்தப்பட்டார்.

அதன் பின்னர் திருமதி வில்லிஸை விசாரணை செய்த ஈரோஸ் அமைப்பு விசாரணை பற்றிய விவரங்களை அறிக்கையாக வெளியிட்டது.

அந்த அறிக்கையில் திருமதி வில்லிஸ் இலங் (4-ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பு வந்து சேர்ந்தனர்

கொழும்பு, பெப். 19

திருமதி வில்லிஸ் பெனிலோப், திரு மக்டொமெட், செல்வி. சன்ட்ரா சிங்கர் ஆகியோர் நேற்றிரவு 7.10 மணிக்கு விசேஷ விமானம் மூலம் கட்டுநாயக்கா வந்து சேர்ந்தனர்.

தாம் மிகவும் களைப்புற்றிருப்பதாகவும் அதனால் பத்திரிகையாளருடன் பேச தாம் தயாராக இல்லை என்று திருமதி வில்லிஸ் விமான நிலையத்தில் வைத்துத் தெரிவித்தார்.

இதேவேளையில் திருமதி வில்லிஸை விடுவித்ததற்காக இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் திரு. கே. ஏ. பி. ஸ்டுவார்ட், ஈரோஸ் இயக்கத்திற்கு நன்றி தெரிவித்திருக்கிறார்.



சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வு முகாம் செயலகத்தில் வைத்து திருமதி வில்லிஸ், பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது அதிகாரி திரு. மக்டொமெட், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி செல்வி. சன்ட்ரா சிங்கர் ஆகியோர் உரையாடிக் கொண்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

## பூநகரியில் குளிக்கப் போன சிப்பாய்களுக்கு துப்பாக்கிச் சூடு!

### ஒருவர் மரணம்; 4 பேர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 19

குளிக்கப்போன ஆயுதப் படைவீரர் மீது போராளிகள் மறைந்திருந்து நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் மரணமானார்.

4 சிப்பாய்கள் காயம் அடைந்ததாகவும் தெரிகின்றது.

நேற்றுக் காலே 11மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது

பூநகரி—மன்னர் வீதியில் 4ஆம் கட்டை முகாமில் உள்ள ஆயுதப்படையினர் சிலர் அருகில் உள்ள நீரோடை ஒன்றில் குளிக்கச் சென்று (4-ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய மீன்பிடிப் படகு தாக்கப்பட்டது

சென்னை, பெப். 19

இராமேஸ்வரம் கரைக்கு அருகே இந்திய மீனவரின் மூன்று இயந்திரப் படகுகளை இலங்கை கடற்படையினர் தாக்கி சுமார் 10 ஆயிரம் ரூபா மதிப்புள்ள மீன்வலைகளையும் உலேகளையும் நேற்று பறித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இலங்கையில் வன்செயல்கள்

## ராஜீவ் மீண்டும் கவலே

சென்னை, பெப் 18

இலங்கையில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவது குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மீண்டும் கவலே தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தின விடம் தமது கவலையை திரு. ராஜீவ் காந்தி நேற்று வெளியிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன வின் செய்தி ஒன்றை திரு திலகரத்தின இந்தியப் பிரதமரிடம் நேற்று ஒப்படைத்தார்.

அந்த வேளையில் தமது கவலையை வெளியிட்ட திரு. காந்தி, இனப்பிரச்சினைக்கு விரைவில் அமைதியான ஓர் அரசியல் தீர்வு காண வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினுர்.

இந்தச் சந்திப்பின் போது இந்திய வெளி (4-ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

19.2.1986

புதன்கிழமை

சுபநேரம்: 5.02 முதல் 6.32வரை

ராகுகாலம்: 12.32 முதல் 2.02வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

கச்சியப்ப சிவாசாரியார் குருபூஜைத் தினம்

## எமக்கு வெற்றி; அரசுக்கு தோல்வி

### பிடிவாதம் பிடித்த அத்துலத் அடிபணிந்தார்

### ஈரோஸ் பேச்சாளர் வெளியிட்ட தகவல்கள்

யாழ்ப்பாணம், பெப். 19

திருமதி வில்லிஸ் விவகாரத்தில் அரசாங்கத்துக்குப் படுதோல்வி. எமக்கு வெற்றி.

அமைச்சர் திரு அத்துலத் முதலி முதலில் பிடிவாதம் பிடித்தார். ஆனல் பிறகு அடிபணிந்து விட்டார்.

இவ்வாறு 'ஈரோஸ்' இயக்கப் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

திருமதி வில்லிஸை விடுவித்த பின்னர் சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வு முகாமில் வைத்து அந்தப் பேச்சாளர் செய்தியாளருடன் உரையாடினுர்.

அவர் அவ்வேளை தெரிவித்ததாவது:-

திருமதி வில்லிஸை விடுவிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை வரவேண்டும் என நாம் நிபந்தனை விதித்தோம்.

இந்த நிபந்தனைக்கு திரு. அத்துலத் முதலி முதலில் இணங்கவில்லே. பிடிவாதம் பிடித்தார்.

பயங்கரவாதிகளின் நிபந்தனைகளுக்கு இணங் (4-ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்திமுரளி



பெரிய ஆள் எல்லே ஏதாவது பெரிசா சொல்லுவார் என்டு நினைக்காதையுங்கோ. மாவட்டத்தையும், மாகாணத்தையும் விட அவருக்கு மனம் வராது. இல்லையண்டா நாளைக்கு இருந்து பாருங்கோ...!

இனப் பிரச்சினே

## அரசின் புதிய திட்டம்:

### ஜனதிபதி நாளே வெளியிடுவார்

கொழும்பு, பெப். 19

இனப் பிரச்சினையில் இலங்கையின் புதிய நிலைப்பாடு குறித்து ஜனதிபதி ஜெயவர்த்தன நாளே வெளியிடுவார் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை நாளே திரு ஜெயவர்த்தன தொடக்கி வைக்கிறுர்.

அப்பொழுதே, இலங்கையின் புதிய நிலைப்பாடு குறித்து யோசனைகளை திரு. ஜெயவர்த்தன வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையில், நேற்று புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியை இலங்கைத் தூதுவர் திரு பேர்னுட் திலகரத்தின சந்தித்தார்.

இலங்கையில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகா (4-ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் முகமூடி தலே ஆட்டுகிறது!
## ஏழு இளைஞர்கள் கைது!!

கொழும்பு, பெப். 19

கொழும்பிலும் 'முகமூடி' தலேயாட்டத் தொடங்கியுள்ளது.

இதன் காரணமாக நேற்றுப் பகல் புறக்கோட்டைப் பகுதியில் 7 தமிழ் இளைஞர்களைப் பொலீஸார் கைது செய்தனர்.

செக்கடித் தெருவில் உள்ள ஜலண்ட் விடுதியில் இவர்கள் தங்கியிருக்கையில் கைது செய்யப்பட்டனர்.

ஜீப் ஒன்றினுள் இருந்து 'முகமூடி' அணிந்த ஒருவர் தலேயாட்டியதைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் வெளிநாடு செல்ல வந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

மேல் விசாரணைக்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

### வீட்டில் வைத்து பெண் கைது

கொழும்பு, மருதானைப் பகுதியில் திங்கட்கிழமை இரவு வட பகுதியைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்களும் ஒரு தமிழ் இளம் பெண்ணும் கைது (4-ஆம் பக்கம் பார்க்க)

கொடுவாமடுவில்

## மட்டக்களப்பு பிரதான பாலம் குண்டு வைத்து தகர்ப்பு

மட்டக்களப்பு, பெப். 19

மட்டக்களப்பை கண்டி - பதுளை நகரங்களுடன் இணைக்கும் பிரதான செங்கலடி - பதுளை வீதியில் உள்ள கொடுவாமடு பாலம் கடந்த திங்கள் நள்ளிரவு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனுல் செங்கலடி வீதியூடாக நடைபெற்று வந்த சகல போக்குவரத்துக்களும் துண்டிக்கப்பட்டன.

மகா ஓயா, உன்னிச்சை, புல்லுமலே, ஆகிய இடங்களுக்கான உள்ளூர் போக்குவரத்துச் சேவைகளும் துண்டிக்கப்பட்டன.

இதன் காரணமாக கரடியனுறு சந்தியில் முகாமிட்டுள்ள ஆயுதப்படையினர் மட்டக்களப்புக்கு வருகை தரமுடியாத நிலே ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து பதுளை, கண்டி போக வேண்டியவர்கள் இனி பொலன்னறுவ வந்து தான் போகவேண்டும்.

இந்தப் பாதையால் பதுளை செல்வதற்கு இரண்டு நாள் எடுக்கும்.



சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வு முகாம் முன்றலில் வைத்து திருமதி வில்லிஸ் பெனிலோப் பிரிட்டிஷ் தூதரக அதிகாரியிடமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியிடமும் ஒப்படைக்கப்படுவதை முதல் படத்தில் காணலாம்.

அதன் பின்னர் அவர்கள் மூவரும் முகாம் அலுவலகத்தை நோக்கி வந்தபோது எடுக்கப்பட்ட படத்தை இரண்டாவது படத்தில் காணலாம்.

## இனப் பிரச்சினேயில் மனித உரிமை மீறல்

### விசேஷ குழு உறுப்பினர் வருகை

கொழும்பு, பெப். 19

இலங்கை இனப் பிரச்சினையுடன் தொடர்புடைய மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதில் சர்வதேச விசேஷ குழு ஒன்று ஈடுபட்டுள்ளது.

அதற்கு முன்னேடியாக இலங்கை அரசு முக்கியஸ்தர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களுடன் கலந்துரையாடித் தகவல்களைப் பெறும் நோக்கத்துடன் இக் குழுவின் முக்கிய உறுப்பினரான செல்வி யூடித் ஹார்ட் நேற்று இலங்கை வந்தார்.

பிரிட்டனில் தொழிற் கட்சி அரசில் அமைச்சராகப் பதவி வகித்தவர் செல்வி யூடித் ஹார்ட்.

இந்த சர்வதேசக் குழுவின் தலைவர் நோடல் பரிசு பெற்ற தென் ஆபிரிக்க பிஷப் டுட்டு ஆவார்.

செயலாளராகப் பணி (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஈராக் விமானகேந்திரம் கைப்பற்றப்பட்டது

## ஈரான் அறிவிப்பு

தெஹ்ரான், பெப். 18

இராணுவ நடவடிக்கைகளை வேவு பார்க்கவும் எதிரியின் கடற் படைத்தளங்களைத் தாக்குவதற்கும் ஈராக் பயன்படுத்திய வளைகுடா விமானத்தளமொன்றைத் தான் கைப்பற்றிவிட்டதாக ஈரான் அறிவித்துள்ளது.

அல்பா, பாஸ்ரா நகரப்பாதைகளில் ஈராக்கின் கடற்படைத் தளத்தை நோக்கி ஈரான் துருப்புக்கள் முன்னேறிக்கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் 4 ஜெட்விமானங்களையும் 2 ஹெலிக்கொப்டர்களையும் பீரங்கிப் படகுகள் பலவற்றையும் தான் சுட்டு வீழ்த்திவிட்டதாகவும் ஈரான் மேலும் தெரிவித்தது.

ஷாப்-தல்-அராப் நீர் வழிப்பாதைப் பகுதிகளில்தான் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டதாக ஈராக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை மும்முனைத் தாக்குதல் மேற்கொண்டு துறைமுக நகரமான அல்பாவை தான் கைப்பற்றிவிட்டதாக ஈராக் அறிவித்துள்ளது.

இதற்கிடையே இராணுவ உபகரணங்களை எகிப்து ஈராக்குக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும். ஜனாதிபதி ஹஸ்னி முபாரக்கின் விசேட தூதுவர் இப்பொழுது பாக்தாத்தில் தங்கி இருப்பதாகவும் கூறப்படுகிறது

வளைகுடாப்போர் உக்கிரமடைந்துள்ள இந்தக் கட்டத்தில் போரை நிறுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குவைத்தும் சவூதி அரேபியாவும் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஈரான் அதிபர் கொமெய்னியின் விசேட தூதுவர் ஒருவர் பாரதத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

## அமெரிக்காவுக்கு பாரதம் விரோதமில்லை

### அமெரிக்க செனட்டரின் கருத்துக்கு

### பாரத அமைச்சர் பதில்

புதுடில்லி, பெப். 18

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவுக்கு விரோதமான போக்கை பாரதம் கடைப்பிடிக்கிறதென்ற குற்றச்சாட்டுக்கு பாரதம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுவரை அமெரிக்காவுக்கு சாதகமாக 16 வீதமான தீர்மானங்களையே பாரதம் ஆதரித்துள்ளதாகவும் அந்த செனட்டர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்துக்கு பாரத வெளியுறவு அமைச்சர் மறுப்புத் தெரிவித்தபோது. அமெரிக்கா மீது எந்த வித வெறுப்பும் பாரதத்துக்கு இல்லை எனவும் பொதுக் கருத்து உடன்பாட்டு அடிப்படையிலேயே பல பிரச்சினைகளுக்கு முடிவு காண வேண்டி இருப்பதாலுமே பாரதம் இவ்வாறு நடந்து கொள்ளுகிறது.

பாரதத்தின் இந்த அணுகு முறைகள் பாரதத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை எந்த வகையிலும் பாதிக்காது

இவ்வாறு வெளியுறவு அமைச்சர் தனது மறுப்பில் தெரிவித்துள்ளார்.

## கேரள தேர்தல்

புதுடில்லி, பெப் 18

கேரளத்தில் தேர்தல் நடத்துவதா அல்லது நடத்தாமல் விடுவதா என்பதை முதல்வர் கருணாகரனே தீர்மானிக்க வேண்டும்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமையில் கூடிய கேரள காங்கிரஸ் 'ஐ' கட்சி கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தட்சர் அறிவிப்பு

லண்டன், பெப். 18

பிரிட்டனில் கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைமைக்கு யாராவது போட்டியிட்டால் தானும் போட்டியிடப்போவதாக பிரதமர் மார்கிரட் தட்சர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் வைத்தே தட்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

## வெளி உலகில்

# பிலிப்பீன்ஸ் தேர்தலில் ஊழல் விவகாரம்

### தூதுவர் பிலிப் ஹபிப் பலரையும் தொடர்பு கொண்டு ஆராய்கிறார்

மணிலா, பெப். 18

பிலிப்பீன்ஸ் வந்துள்ள அமெரிக்க ஜனாதிபதியின் விசேட தூதர் பிலிப் ஹபீப் 'தேர்தல் தில்லுமுல்லுகள்' தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுவருகிறார்.

மணிலாவில் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகளை ஆராயவே திரு. றேகன் பிலிப் ஹபீப்பை இங்கு அனுப்பியிருந்தார்.

ஆர்ச்பிஷப் கார்டினல் ஸிங்கையும், சுதந்திர தேர்தலுக்கான சுதந்திர தேசிய இயக்க தலைவரையும் மற்றும் ஜனாதிபதி மார்க்கோஸ், திருமதி கொரசன் அக்கியூனோ ஆகியோரையும் அவர் சந்தித்துள்ளார்.

அமெரிக்க கண்காணிப்புக் குழுவின் தலைவராக பிலிப்பீன்ஸ் சென்றிருந்த திரு. றிச்சார்ட் லூகா தூதுவர் ஹபீப்பின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிலிப்பீன்ஸில் ஆட்சியில் இராணுவ மட்டத்தில் புதிய சில மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. இராணுவ லெப்டினன்ட் ஜெனரலாக ஜெனரல் றெமோஸ்தற்காலிகமாக பதவியேற்கிறார். பதவியிலிருந்த வேபியன்வேர் பதவி விலகியதை அடுத்தே இந்த நியமனம்வழங்கப்படுகிறது.

## தென்கொரியாவில் பொலீஸார் சோதனை

சியோல், பெப். 18

தென் கொரியா அரசியல் அதிருப்தியாளர்களின் பணியகங்கள் அண்மையில் பலத்த பொலீஸ் சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

ஜனநாயக சீர்திருத்தங்களைக் கோரும் இந்த இயக்கங்களின் இரகசிய ஆவணங்களைத் தேடியே இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

அரசியல் அதிருப்தியாளர் இயக்கத் தலைவரான கிம்-டா-ஜுங் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் அவரது தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பலத்த பொலீஸ் காவல் போடப்பட்டுள்ளது.

## நான்கு தலைமுறை கலைஞருடன் நடித்தவர்

நான்கு தலைமுறை நடிகர்களுடன் நடித்துவிட்டவர் வி.கோபாலகிருஷ்ணன். இப்பொழுதும் திரையுலகில் தனிச் சிறப்புடன் தான் அவர் இருக்கிறார்.

எம். கே. தியாகராஜ பாகவதரின் ''சிவகவி'' படத்தின் பின்னணிப் பாடகி கோபாலகிருஷ்ணனின் சகோதரி.

படித்துக் கொண்டிருந்தவர் ஓய்வு நேரங்களில் சகோதரியுடன் படப்பிடிப்புகளைப் பார்க்கப் போனார். அது அவரை 'நடிக்க வேண்டும்' என்ற ஒரு நிலைக்குக் கொண்டு வந்தது.

பதினோராவது வயதில் நாடகத்தில் நடிக்கத் தொடங்கினார் தொடர்ந்து பி யூ.சின்னப்பா நடித்த 'ஹரிச்சந்திரா' படத்தின் மூலம் திரையுலகுக்குள் புகுந்தார்.

அவர் இப்படிச் சொல்கிறார்.

'அன்றிலிருந்து இன்று வரை நடிகர்கள் கலைஞர்கள் மத்தியில் எனக்கு இருக்கும் மதிப்பும் மரியாதையும் குறையவே இல்லை.

தியாகராஜ பாகவதர், பி. யூ. சின்னப்பா காலத்தில் இருந்து எம். கே ராதா, எம். ஜி. ஆர், சிவாஜி, ஜெமினி, எஸ். எஸ் ஆர். ரவிச்சந்திரன், ஜெய்சங்கர் தொடங்கி கமல், ரஜனி, பிரபு, கார்த்திக், பாண்டியன் சுரேஷ், முரளி வரை நான்கு தலைமுறைக் கலைஞர்களும் நல்ல நட்புறவுடன் தான் இருக்கிறார்கள்.

மேக்கப் போட்டு நடிக்கும் போதே சந்தோஷமாக இருக்கிறேன். அன்றும் இன்றும் என்றும் என்னுடன் நடித்த, நடிக்கும் கலைஞர்களை நான் நேசிக்கிறேன்.

பள்ளியில் படிக்கத் தொடங்கியபோதே நடிக்க ஆரம்பித்தேன். நடிப்பு கல்லூரி வாழ்க்கையிலும் தொடர்ந்தது.

அந்தக் காலத்திலேயே எம். ஏ. படித்துவிட்டு வேறு எந்தத் தொழிலுக்கும் போகமல் எந்தத் தொழிலைப் பற்றியும் நினைக்காமல் இன்றும் ஒரு நடிகனாகவே நடிதுக் கொண்டிருக்கிறேன்.

நாடகம், சினிமா இரண்டுமே எனது இலட்சியமாகிவிட்டது., என்கிறார் வி. கோபாலகிருஷ்ணன்.

தினசரி சினிமா

## பொற்கோயில் இழுபறி

சண்டிகார், பெப், 18

சீக்கிய தீவிரவாதிகளிடமிருந்து பொற்கோயிலைக் கைப்பற்றப் போவதாக மிதவாதிகள் அறிவித்துள்ளனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை அகாலிதள் ஆதரவாளர் கூட்டம் நடத்தப்பட்டது

பல கொலைகளுக்கும் காரணமான தீவிரவாதிகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொற்கோயிலில் இருந்து அவர்கள் கலைக்கப்படுவார்கள் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## மக்கள் முகம்

### இடமாற்றம்

மானிப்பாய், பெப், 19

நவாலி மகா வித்தியாலய ஆசிரியை திருமதி ஆர்,இராஜரத்தினம் இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து சோதி வேம்படி வித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

### நிர்வாகிகள்

வட்டுக்கோட்டை, பெப், 19

சங்கானை மேற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சங்க புனருத்தாரணக் கூட்டம் சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் சங்கானை மேற்கு கிராம சேவையாளர் திரு. த. கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. து. வைத்திலிங்கம் (சங்கானை உதவி அரசாங்க அதிபர்) தலைவர் திரு. நாக. பத்மநாதன் செயலாளர், திரு ஆ த. ஜெயராசா, பொருளாளர்; திரு மு. பராபரசிங்கம், நிர்வாக உறுப்பினர்கள்: திரு. ஆ. பஞ்சாயுதன், திரு. சு. நடேசு, திரு.இ. நடேசன் திரு. வே. தேவராசா, திரு .க. சுதாகரன், திரு, ந. ஸ்ரீவேணுகோபால். திரு.இ. மகேந்திரராசா, திரு. அ. நவரத்தினம்

## மோட்டார் சைக்கிளில் சென்றவர் பலி

யாழ்ப்பாணம்,பெப்19

வவுனியாவில் உள்ள சாஸ்திரி கூளாங்குளத்திலிருந்து தாண்டிக்குளம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

கறுப்பு உடையில் அப்பகுதியில் பதுங்கி நின்றவர்களே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் சென்றவர் சைக்கிளைப் போட்டுவிட்டு ஓடினார் என்றும் —

சிறிது தூரம் சென்ற பின்னர் அவர் விழுந்து இறந்தார் என்றும் கூறப்படுகிறது.

## முஸ்லிம் கடத்தலை அடுத்து மூதூரில் தேடுதல்

திருகோணமலை, பெப் 19

மூதூரிலுப் திங்களன்று ஆயுதப் படையினர் பலத்த தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு இருந்தனர்.

இரண்டு முஸ்லிம் நபர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடத்தப்பட்ட இரண்டு பேரில் ஒருவர் தப்பி வந்து பாதுகாப்புப் படையினருக்கு கொடுத்த தகவலைத் தொடர்ந்து குறிப்பிட்ட பகுதி ஒன்றைச் சுற்றி வளைத்து படையினர் தேடுதல் நடத்தினர்.

## முஸ்லிம்கள் பிரச்சினைபற்றி மாநாடு

மட்டக்களப்பு, பெப். 19

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் காத்தான்குடியில் மாநாடு ஒன்று நடைபெறும்.

காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாசல் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

## மன்னார் மார்க்பெட்டில் சாக்கு கொள்ளை

கொழும்பு, பெப். 19

மன்னாரின் மார்க்பெட் நிறுவனத்துக்குச் சொந்தமான 80,000 ரூபா பெறுமதியான வெ[illegible] சாக்குகள் இனந்தெரியாதோரால் கொள்ளை இடப்பட்டன.

வெள்ளி இரவு இச்சம்பவம் நடந்தது.

சாக்குகள் அனைத்தும் டிராக்டர் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டன.

## நவா மினி (உஷா மினி முன்பாக)



MISSING IN ACTION - I, II

10 30, 12 30, 2.30, 4.30, 7.00, 9 30

0 முதன் முதலாக ஒரிஜினல் பிரதியில்
0 (A) கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்.
0 தடை செய்யப்பட்டது.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு:

# குடியிருப்பு பகுதிகளை சுவீகரிப்பதை எதிர்க்க மக்கள் முடிவு

பலாலி, பெப். 19

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு என்று அதன் தென்பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதிகளைச் சுவீகரிக்கும் செயலை ஆட்சேபித்து நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாக நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தை மயிலிட்டி தெற்கு பிரஜைகள் குழு, குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம், விழிப்புக்குழு ஆகியன கூட்டாக ஒழுங்கு செய்து இருந்தன.

மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புப் பகுதிகளையும், அவர்களது சீவனோபாயத்தின் வருமானத்துக்கானதோட்ட நிலங்களையும் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது

இதனால் பாதிக்கப்படவுள்ள குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிமக்கள் பேரதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் மூலம் ஆரம்ப ஆட்சேபனையை உரிய இடங்களுக்குத் தெரிவித்து இந்த அநீதியை எதிர்ப்பதற்குத் தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட பகுதிக் காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பாக அளவை வேலைகளில் ஈடுபடுவதற்கென இப்பகுதிகளுக்கு வருகை தந்த நிலஅளவைக்காரர் மக்களின் எதிர்ப்பால் திரும்பிச் சென்றதாக அறியப்படுகின்றது.

## "கொட்டியாவா" என்று கேட்டுத் தாக்கினார்கள்

நல்லூர், பெப். 19

"கொட்டியாவா" என்று கேட்டுச் சீருடையினர் தாக்கிய போது நான் "இல்லையய்யா நாட்டாண்மை வேலை செய்பவன்" என்று கூறியும் அவர்கள் என்னைத் தாக்கினர்.

குமரேசன் நாகராசா (வயது 21) என்ற இளைஞர் கடந்த ஞாயிறன்று சீருடையினரின் தாக்குதலுக்கு இலக்காகி யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

[illegible] பவம் பற்றி அவர் விவ[illegible].

நெல் கட்டுவதற்காக லொறிமூலம் பரந்தனுக்குப் போனோம்.

அப்பொழுது நேரம் பத்து மணியிருக்கும் நாங்கள் மூன்றுபேரும் பரந்தன் சந்தியில் சாப்பிட்டு விட்டு வெளியில் நின்றோம்.

அப்பொழுது ஆமி வாருன் எனக் கூறிக் கொண்டு வீதியால் மக்கள் சிதறி ஓடினார்கள்.

நானும் வயல் வெளிகளுக்குள்ளால் விழுந்து ஓடினேன்.

வயல் வெளிகளினூடாகத் துரத்தி வந்த சீருடையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் எனது கையில் காயம் ஏற்பட்டு வயலுக்குள் விழுந்து விட்டேன்.

என்னைத் துரத்தி வந்த சீருடையினர் "[illegible]" எழும் [illegible] என்று சொல்லி வானத்தை நோக்கிச் சுட்டனர்.

நான் எழுந்து "சுடாதீர்கள்" என்று கையெடுத்துக் கும்பிட்டேன்.

உடன் என்னை அழைத்துக் கொண்டு சென்று கவச வாகனத்தில் ஏற்றி முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

அங்கு வைத்து என்னை "கொட்டியா தான் நாட்டாண்மை என்று பொய் சொல்லுகிறாய்" என்றனர். அதற்கு நான் "அப்படி இல்லை" என்று மன்றுடியபடி சொன்னேன்.

பின்னர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு எனக்குச் சிகிச்சை அளிக்கப்பட்ட பின் மீண்டும் முகாமிற்கு கொண்டு சென்றனர்.

பின்னர் வைத்திய சாலையில் வைத்தியர்களின் அறிக்கையின் படி என்னை அவர்கள் விடுதலை செய்தனர்.

அம்புலன்ஸ் மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தேன். இப்படி அவர் தெரிவித்தார்.

எமது புதிய வெளியீடுகள்:

* சந்திரசேகர் — சுலக்சனு
செல்வாக்கு (தரமான பிரதி)
* திருமுருகன் — வனிதாஸ்ரீ
மலர்கள் நனைகின்றன (THOMSUN MASTER)
* ரஜனிகாந்த் — அம்பிகா
மிஸ்டர் பாரத் (PYRAMID MASTER)

மற்றும் புதிய ஆங்கிலப்பட வெளியீடுகள்

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

## நீத்தார் பட்டியல்

### பொன்னம்பலம் நடராசா

'லலித வாசம்', புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் பொன்னம்பலம் நடராசா காலமானார். இவர் காலம்சென்ற பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மகனும், காலம்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரன் (உரிமையாளர், நல்லூர் ரேடர்ஸ், கொக்குவில்), ரவீந்திரன் (ஓமான்), லலிதா, ராதா (ஆசிரியர், விவேகானந்த மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை), சந்திரா (சவூதி அரேபியா), பத்மா, நேசராசா (ஜேர்மனி), வரதராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற சம்பந்தர், காலம்சென்ற திருநாவுக்கரசு, குழந்தைவேலு, திலகவதி, துரையப்பா, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடேசன் (நில அளவையாளர், பொலனறுவை), சிவராசா (ஜெயா ஆட்போட்டோ, சாவகச்சேரி), வசந்தரூபி, செந்தமிழ்ச்செல்வி, சிவலோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மணிவண்ணன், மதிவண்ணன், சசிதேவா, துஷியந்தி, ஹேமலதா, தாரணி ஆகியோரின் பேரனுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-2-1986 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 10 மணியளவில் தகனம் செய்வதற்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'லலித வாசம்', புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
18-02-1986.

தகவல்:
ந. மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

பூவைக் கையில் எடுத்தால் வாசனையை அறிவது போலவும் கல்லின் மீது சந்தனக் கட்டையைத் தேய்த்தால் மணத்தை முகர்வது போலவும் கடவுளைப் பற்றி எப்போதும் நினைப்பதால் ஆத்மீக விழிப்பு ஏற்படும்.
-- அன்னை சாரதாதேவி.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 15, 2ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 24805 22073

19-02-86 த. பெ. 23


## பௌத்த சங்கங்களும் அரசியல் பிரச்சினைகளும்

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, தமிழ்நாடு அரசாங்கமும், இந்திய மத்திய அரசாங்கமும் உதவ வேண்டும்.

இவ்வாறு ஒரு கோரிக்கை தமிழ்ப் பகுதியிலிருந்து வந்தால் அது புதினமல்ல. அரசாங்கம் கேட்டால் செய்தியாகக் கருதப்பட்ட காலமும் கடந்து விட்டது.

இந்தக் கோரிக்கையை இப்போது விட்டிருப்பவர் இலங்கை பௌத்த சங்கத்தின் தலைவர் திரு எட்மண்ட் பஞகொட.

பெரும்பான்மை மக்கள் மட்டத்தில் அல்லது ஸ்தாபன மட்டத்தில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தமிழ்நாடு, இந்திய மத்திய அரசுகள் உதவ வேண்டும் என வெளிப்படையாகக் கோரப்படுவது இதுவே முதற்தடவை என்றும் சொல்லலாம்.

எமது உள்நாட்டுப் பிரச்சினையில் கைபோட இந்தியா யார் என்று இந்த நாட்டின் பிரதமர் நாடாளுமன்றத்தில் வைத்துக் கேட்டு இன்னும் பல மாதங்கள் ஆகவில்லை. ஆனல் இந்தியாவை விட்டால் வேறு எந்த வழியாலும் பிரச்சினையை அரசியல் ரீதியில் சமாதானமாகத் தீர்க்க முடியாது என்ற நிலையை பிரதமர் மட்டுமல்ல, முழு ஆளும் வர்க்கமும் இப்போது உணரத் தலைப்பட்டு விட்டது.

அந்த வகையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்றும் சொல்லலாம். அரசியல் வாதிகள் தமது அரசியல் லாபம் கருதி உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவது சகஜம்.

ஆனல் சாதாரண மக்கள் அப்படியல்ல. உண்மையைப் புரிந்து கொண்டால் நேர்வழி செல்லவே விரும்புவர்.

இலங்கையின் அரசியலோடு பௌத்த மதம் பின்னிப்பிணைந்தது. மேலும் பௌத்த மதகுருமார் அரசாங்கங்களினதும் அரசியல் தலைவர்களினதும் தலைவிதியை நிர்ணயிப்போராகவும் வழிநடத்துநர்களாகவும் விளங்குகிறார்கள்.

இந்தவகையில் அரசாங்கத்துக்கும் அரசியல் தலைவர்களுக்கும் பௌத்த குருமார் வலது புறத்தில் இருந்தால், இடது புறத்தில் அணி வகுப்பவை பௌத்த சங்கங்கள்

இலங்கை பௌத்த சங்கமும் அவற்றில் ஒன்று. அதன் குரலை பௌத்த மக்களின் குரலாக எடுத்துக் கொள்வதில் தவறில்லை.

எனவே, இனப்பிரச்சினையைச் சமாதானமான முறையில் அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் தீர்க்கவேண்டும். அதற்கு இந்திய மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் உதவ வேண்டும் என்று பௌத்த சங்கத் தலைவர் திரு. எட்மண்ட் பஞகொட கருதினல் அது வரவேற்கத்தக்கது.

அல்லாமல்—

தமிழ்நாடு அரசும், இந்திய அரசும் அந்த நாட்டில் உள்ள தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவளிக்காமல், அவர்களை இலங்கைக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

நாமே எமது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வோம் என்ற அகங்காரத்தோடு திரு. பஞகொட கோரிக்கை விடுத்திருந்தால் அது கண்டிக்கப்பட வேண்டியது.

அந்தக் கோரிக்கை நிறைவேறமாட்டாது என்பதையும் அவர் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த நாட்டு ஜனாதிபதி விடுத்த அத்தகைய கோரிக்கை கணக்கில் எடுக்கப்படவில்லை என்ற கசப்பான அனுபவம் திரு. பஞகொடவுக்கும் தெரியாமல் இருக்க நியாயமில்லை.

இலட்சக் கணக்கான இலங்கைத்தமிழர்கள் இந்தியாவில் தஞ்சமடைந்து அகதிகளாக இருக்கும்போது, தமிழ் இளைஞர்களை மட்டும் எப்படி இந்தியா திருப்பி அனுப்ப ஒப்புக்கொள்ளும்? இந்தச் சின்ன விஷயத்தைப் பகுத்து உணர அரசு தவறியது போல திரு. பஞகொடவும் தவறினல் அது எவர் குற்றமும் அல்ல.

தமிழ்நாடு அரசும் இந்திய அரசும் நியாயமான தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு திரு. பஞகொட கோரிக்கை விடுத்திருந்தால் அவர் பாராட்டுக்குரியவர். இவ்விஷயத்தில் ஒரு முன்னோடியாகக் கொள்ளப்பட வேண்டியவருமாவார்.

அவரது முன்மாதிரியைப் பார்த்து ஏனைய பௌத்த பிரமுகர்களும் நல்வழியில் சிந்திக்கத் தலைப்படக் கூடும்.

பௌத்த பெருமான் அன்பையும், சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும், கருணையையும் போதித்தவர். போர்புரிந்து உயிர்களைக் கொல்லக்கூடாது என்று அசோகச் சக்கரவர்த்திக்கு நல்வழி காட்டியவர்.

அவரது மதத்தைக் கடைப்பிடிப்போர் அதனை உணர்ந்து தமிழர்களின் நியாயமான உரிமைகளை - அவர்களது சுயநிர்ணய உரிமையை வழங்க அரசாங்கத்தைத் தூண்ட வேண்டும்.

பகைமைக்கும் அழிவுக்கும் அநீதிக்கும் துணைபோகாமல், தர்மத்துக்கும் நியாயத்துக்கும் உதவுவதில் உறுதியாக இருக்க வேண்டும். செய்வார்களா?

# தமிழரைப் பணிய வைக்க

# பங்கீட்டரிசியில் கை வைத்தவர்கள்

## வெற்றியை நினைவுபடுத்தும் பெப்ரவரி 20- நாளை

**த. இன்பரசு**
உரும்பராய்

நாளை 20 ஆம் திகதி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றக் கட்டடத்தில் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன வைபவரீதியாகத் திறந்து வைத்து ஆற்றவிருக்கும் கொள்கைத் திட்ட உரையில் இத் தீவின் இனப் பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கம் எவ்விதமாக அணுகப்போகிற தென்பது கோடிட்டுக் காட்டப்படலாமென்று அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

1956 பெப்ரவரி 20 ஆம் நாளில்தான் இத் தீவின் ஐக்கியத்தையும், தீவில் வதியும் மக்களின் தேசியத்தையும் குழி தோண்டிப் புதைத்துவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியானது தனது களனி மாநாட்டில் இத் தீவின் உத்தியோக மொழியாக சிங்கள மொழி மட்டுமே இருக்க வேண்டுமென்ற தீர்மானத்தை எடுத்தது.

எல்லோரும் இலங்கையர் என்ற தேசிய உணர்வு 'படுகொலைக்கு' இலக்காகிய நாள் பெப்ரவரி 20 ஆம்திகதியாகும். காலனி ஆட்சியினரின் எச்ச சொச்சமாக நிலவிய இலங்கையர் என்னும் தேசியம் அழிக்கப்பட்டு இரு வேறு தேசிய இனங்களைக் கொண்ட ஓர் தீவாக இலங்கை சர்வதேச அரங்கில் அறியப்படவிடப்பட்ட வெள்ளோட்டம்தான் களனி மாநாட்டின் சிங்களம் மட்டும் தீர்மானம். இத் தீவில் தமிழ் தேசியம் தழைக்க இடப்பட்ட வித்தாகவும் அதனை எடுத்துக் கொள்ளலாம்.

இன்றே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் நாடாளுமன்றப் பாதையைத்துறந்துபுரட்சிப் பாதையில் இளங்காளையர் தலைமையில் ஏறுநடை போடத் தொடங்கிவிட்டது. நாடாளுமன்ற அரசியல் பாதைக்கு மீண்டும் அவர்களைத் திசை திருப்புவதற்கு எந்தச் சக்தியாலும் முடியாது. ஆறுகள் வந்த வழி மீண்டும் திரும்பிப் பாயாதல்லவா?

இத் தீவில் தமிழ்த் தேசியத்தை ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றோடு ஒன்று போட்டிபோட்டு வளர்த்துவிட்டன என்றால் இடதுசாரிக் கட்சிகளுக்கு அதில் சிறிதளவேனும் பங்கு கிடையாதா என்ற கேள்வி எழுவது நியாயமானதே!

ஆரம்பத்தில் இரு மொழிகளை சம அந்தஸ்துடைய உத்தியோக மொழிகளாக ஆக்க வேண்டுமென்றுபோராடி வந்த சமசமாஜ, பொதுவுடைமைக் கட்சிகள் இரண்டிலும், பின்னது ஆரம்ப கால கட்டத்திலேயே சிங்களப் பேரினவாதத்துக்குத் தாக்குப்பிடிக்கவியலாது தனது மொழிக் கொள்கை வியாக்கியானத்தை மாற்றிக் கொண்டுவிட்டது

அவர்களுடைய மொழிச் சமத்துவக் கொள்கையின்படி தமிழ் மொழிக்கு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பிரதேச நிர்வாக மொழி அந்தஸ்தும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் சிங்களமே ஏக உத்தியோக மொழியாக அமையுமென்றும் கூறப்பட்டது.

சமசமாஜக் கட்சியோ 1963ல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டரசாங்கத்தில் இணையும் மட்டும் தனது கொள்கையில் திடமாக இருந்து வந்தது ஆயினும், படிப்படியாக வக்கரிக்கத் தொடங்கிய அதன் மொழிச் சமதத்துவக் கொள்கை 1972ல் அக் கட்சியின் மூத்ததலைவரான கொல்வின் ஆர். டி. சில்வாவினுல் தயாரிக்கப்பட்ட குடியரசு அரசமைப்புத் திட்டத்தின் மூலம் தனிச் சிங்கள சட்டத்துக்கு மட்டுமல்லாது பௌத்த மதத்துக்கும் நிரந்தரமான ஒரு ஸ்தானத்தை வழங்கி தமிழ் மொழியையும், பௌத்தம் அல்லாத ஏனைய மதங்களையும் கீழ்மைப் படுத்துவதில் போய் நின்றது.

எது எப்படியிருப்பினும் 1956 ஜூன் 5ஆம் திகதி நாடாளுமன்றம் தனிச் சிங்கள மசோதாவை விவாதித்த நேரத்தில் சிங்கள நாடாளுமன்றத்தின் தீவிரவாதிகளை நோக்கி "உங்களுக்கு இரு மொழிகளும் ஒரு நாடும் வேண்டுமா? இல்லை ஒரு மொழியும் இரு நாடுகளும் தேவையா?'' என்று விடுத்த கேள்விக் கணைக்காக தோழர் கொல்வின் ஆர். டி. சில்வாவை தமிழ் மக்களின் விடுதலைக்குப் பின்னும் தமிழினம் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளது.

திரு. கொல்வின் ஆர். டி. சில்வாவின் வாய்மொழியைத் தமிழ் இனம் "பொன் மொழியாக'' எடுத்துக்கொண்டது இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் 1976ஆம் ஆண்டிலாகும். அந்த முடிவும் தமிழ் மக்களால் தன்னிச்சையாக எடுக்கப்படவில்லை. அப்படியான ஒரு முடிவுக்கு வருமாறு தமிழ் மக்களை விரட்டியவரும் தோழர் கொல்வின் ஆர். டி. சில்வாதான்.

தமது 1972 அரசமைப்புத் திட்டத்தின் மூலமாகவே அச் சாதனை அவரால் நிலைநாட்டப்பட்டது. தமிழ்த் தேசியத்தை உருவாக்கி வளர்த்துவிட்டதில் அவரும் நிறையப் பங்களிப்புச் செய்துள்ளார்.

1956-ல் தனிச்சிங்களம் உத்தியோக மொழியாகச் சட்டப் புத்தகத்தில் இடம்பெற்றது. 1961-ல் அதுவே நீதிமன்ற மொழியாகவும் கொண்டுவரப்பட்டது.

நீதிமன்ற மொழியாக தனிச் சிங்கள மொழியைத் திணிப்பதற்கு எடுக்கப்பட்ட எத்தனங்களை ஆட்சேபித்தே 1961 பெப்ரவரி 20-ம் நாளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ் கச்சேரி முன்பாகத் தனது சாத்வீக சத்தியாக்கிரக மறியற் போராட்டத்தை ஆரம்பித்திருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியால் ஆரம்பிக்கப்பட்ட மறியல் போராட்டம் தொடருமாக இருந்தால் பங்கீட்டுப் புத்தகங்கள் மூலம் பங்கீட்டரிசியைப் பெற்றுவந்த பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, அதைத் தடுக்க விழைந்த உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. நித்தியானந்தன் தமது அலுவலகத்தைக் கச்சேரியில் இருந்து பாங்சால் வீதியிலுள்ள (கிட்டங்கித் தெரு) களஞ்சியத்துக்கு இடம் மாற்றினர்.

ஆனலும் ஒரு சிலரின் பிற்போக்குத் — தனத்தினுல் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியின் அலுவலகம் திரும்பவும் கச்சேரிக்கு மாற்றுவிக்கப்பட்டது.

ஐக்கிய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் யாவரும் பங்கீட்டரிசியைப் பெறவேண்டுமெனில் கச்சேரிக்கு வந்துதான் தீரவேண்டுமெனப் பலவந்தமான நிர்ப்பந்தம் செய்யப்பட்டது.

கச்சேரி மறியல் போராட்டம் எதிர்நோக்கிய முதல் சவால் அதுவே. சத்தியாக்கிரகிகளே பட்டினிச் சாவில் இருந்து பொது மக்களைக் காப்பாற்றும் பொருட்டாக அந்தச் சவாலை எங்ஙனம் சமாளித்திருந்தார்கள் என்பது நினைவில் நிறுத்தப்படவேண்டிய ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

சம்பந்தப்பட்ட காலம் நெல் அறுவடை நடைபெறவிருந்த காலமாக இருந்தமையும், கூட்டுறவுத்துறை இன்று போல் பூரணமான அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாது பொதுமக்கள் கைகளில் இருந்தமையும் மேற்படி வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

கச்சேரி சத்தியாக்கிரகிகள் மூன்றும் குறுக்குத் தெரு பிரதான வீதிச் சந்தியில் இயங்கி வந்த கூட்டுறவு வங்கியில், கூட்டுறவு ஐக்கிய சங்கங்களினூடாக ஒரு பெரும் தொகைப் பணத்தைக் கடனாகப் பெற்று, விவசாயிகளிடம் நேரடியாகவே நெல்லைக் கொள்முதல் செய்து, ஆலைகளில் கொடுத்துக் குற்றுவித்து, அரிசியாக்கினர்.

பங்கீட்டரிசியைப் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு அங்கீகாரம் பெற்றிருந்த வர்த்தகர்கள் மற்றும் கூட்டுறவு ஐக்கிய சங்கங்களினூடாக கட்டுப்பாட்டு விலைக்கே பொது மக்களுக்கு அதனை வழங்கியதன் மூலம் அம் மாபெரும் சாதனையை நிலைநாட்டினர்.

தென்னிலங்கையில் 1953ஆம் ஆண்டு பங்கீட்டரிசியின் விலையேற்றத்தை ஆட்சேபித்து நடத்தப்பட்ட ஹர்த்தாலின் பிரதாபங்களை மேடைதோறும் முழங்கி வருபவர்கள் வட இலங்கையில் தமிழ் மக்களைப் பட்டினி போட்டுப் பணிய வைப்பதற்கு முனைப்பாக எடுத்த முயற்சி முளையிலேயே கிள்ளப்பட்டது.

## சபாநாயகரிடம் 20-ஆம் திகதி கையளிக்கப்படும்

கொழும்பு, பெப்.19

அமைச்சர் தொண்டமான் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணை பெப்ரவரி 20-ஆம் திகதி நாடாளுமன்றச் சபாநாயகரிடம் கையளிக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவரும் சுதந்திரக் கட்சி உபதலைவருமான திரு. அனுரா பண்டாரநாயக்கா சபாநாயகரிடம் பிரேரணையை நேரில் கையளிப்பார்.

அமைச்சரவைக் கூட்டுப்பொறுப்பை மீறி மலையக நடவடிக்கைகளில் திரு. தொண்டமான் பங்கு வகித்தார் – என்ற காரணத்தை முன்வைத்தே இந்தநம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவதாக சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.



**பொய்யாமொழி**

குறள்:

அன்பின் வழியது உயிர்நிலை
அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

பொருள்:

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும்; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும்.

## கல்வியே தமிழ் மக்களின் பொருளாதார வளம்

**அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் அதிபர் உரை**

வட்டுக்கோட்டை, பெப். 19

கல்வியே தமிழ் மக்களின் பொருளாதார வளமாக அமைந்துள்ளது. தமிழ் மக்களின் அழியாத சொத்தாக அமைந்த கல்வியை சகல மாணவர்களும் சிறுவயதிலிருந்தே பெற்றுக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகள் வளர்ச்சி பெற்றால்தான் வசதியற்ற மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து கற்றுக்கொள்ள முடியும். பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இந்த உண்மையை நன்ருக உணர்ந்து கிராமப்புறப் பாடசாலையை நன்ருக வளர்க்க முன்வரவேண்டும்.

வட்டுக்கோட்டை பிளவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து தலைமையுரை நிகழ்த்திய பாடசாலை அதிபரும் அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திரு. கி. தாமோதரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அதிபர் திரு. தாமோதரம்பிள்ளை கூறியதாவது:-

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பாடசாலைகளின் சகலவிதமான வளர்ச்சிகளிலும் கவனஞ் செலுத்த வேண்டும். இன்றைய மாணவர்களே எதிர்கால நற்பிரஜைகளாக மிளிரப்போகிறவர்கள். இந்த மாணவர்களை நற்பிரஜைகளாக்கும் சிறந்த பணியில் ஈடுபடுபவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியர்கள் மகிழ்ச்சிகரமான முறையில் தமது பணிகளை மேற்கொள்ள பாடசாலைகளில் சகலவிதமான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோரது கையிலேயே தங்கியுள்ளது.

சட்டத்தரணி திரு. மு. கதிர்காமநாதன் திரு. இ. கு. சிவஞானம், டாக்டர் கி. வரதராஜன், திரு. வ. தயாபரசிவம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

# சித்தாந்த உண்மையை விளக்கும் பக்தி இலக்கியம் கந்தபுராணம்

## கந்தன் அருள் பெற்ற கச்சியப்பசிவாச்சாரியார்

**இ. சுலோசனா**

வாழ்வை வளம் பெறச் செய்வன சமய இலக்கியங்கள், பக்தி நெறியுடன் மொழியும் இலக்கியங்களும் இன்பக் கலைகளும் பிரிக்க முடியாதவாறு கலந்துள்ளன. தலைசிறந்த இலக்கியங்களாகவும் சிறந்த கலைவண்ணங்களாகவும் போற்றப்படுகின்றன. அனேகமான காப்பியங்கள் சமயச் சார்பானவைதான்.

பக்தியுணர்ச்சியால் இலக்கியங்கள் உயிர் பெற எங்கள் வாழ்வும் நன்நெறியில் செல்கின்றன. இலக்கியங்களிலே அன்பால் நிறைந்து விளங்குவது பெரியபுராணம். அறிவால் விளங்குவது கந்தபுராணம். இவ்விரண்டும் சமய வாழ்க்கையின் இருகண்களாக அமைந்துள்ளன.

இந்தக் கண்களில் ஒன்ருன கந்தபுராணம் கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது. சுப்பிரமணியக் கடவுளின் வரப்பிரசாதத்தால் காளத்தியப்ப சிவாசாரியாருக்கு புத்திரராக அவதரித்து தமிழ், சமஸ்கிருதம் என்னும் பாஷைகளைக் கற்று சுப்பிரமணியக் கடவுளை மெய்யன்போடு வழிபட்டு வந்தவர்.

புலவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சுப்பிரமணியக் கடவுள் கச்சியப்பர் கனவிலேதோன்றி

> கந்த புராணம் இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியார் குரு பூஜை இன்ருகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

'நீ கந்த புராணத்தாறு சங்கிதைகளுட் சங்கர சங்கிதையின் முதற் காண்டமாகிய சிவரகசிய காண்டத்திலுள்ள தனது சரித்திரத்தை "கந்தபுராணம்'' என்று [illegible] பாடக்கடவாய்'' என்று அருளி "திகட சக்கரச் செம்முக மைந்துளான்'' என்று அடியுமெடுத்தருளினுர்.

இவ்வாறு கச்சியப்பரால் இயற்றப்பட்ட கந்தபுராணத்தை அரங்கேற்றம் செய்யும்போது "திகழ தசம். திகடசம்'' இவ்வாறு கூறும் புணர்தல் விதி இலக்கண நூல்கள் ஒன்றிலும் இல்லையென்று கூற, குமரனே புலவர் வேடந்தாங்கி வந்து அதற்கு புணர்தல் விதி கூறி நூலை அரங்கேற்ற அருள்புரிந்தார்.

கந்தபுராணத்தில் முருகப் பெருமானேடு போரிட்ட சூரனின் இருண்மலமாய ஆணவத்தை அடக்க, முருகன் தனது திருப்பெருவடிவைக் காட்டியதன் மூலம் சைவசித்தாந்த உண்மையை எடுத்துக் காட்டியுள்ளார்.

''எத்துணை காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாது தித்தித்தமுதூறும் அதியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதிகலக்கணத் திருவிருத்தங்களைக் கேட்டல், சிந்தித்தல்களினுல் இவர்கள் உள்ளத்து ஊற்றெடுத்த மெய்யுணர்வேயாம்'' இப்படிக் கந்தபுராணம் உணர்ச்சியின் முக்கியத்துவத்தினையும், சமய இலக்கியப் பரப்பிலே புராணத்தின் மகிமையையும் காட்டி நிற்கின்றது என்று நாவலர் கூறியுள்ளார்.

சங்ககாலத்து குறிஞ்சித்திணையில் போற்றி வணங்கப்படும் தெய்வமாகிய குமரனின் அருளினுல் இயற்றப்பட்ட கந்தபுராணத்தின்மூலம் கச்சியப்பர் புகழ் வானோங்கி நிற்புறுகின்றது

## ஓய்வூதியம் பெறக்கூடிய கிராமவங்கிகள் பற்றிய விவரம்

யாழ்ப்பாணம் பெப்19

யாழ் மாவட்டத்தில் கிராம வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெற விரும்புவோர் பின்வரும் 22 கிராம வங்கிகளில் ஒன்றில் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம் என்று கூட்டுறவுத் தலைமைப் பரிசோதகர் திரு. எஸ். பத்மநாதன் உதயனிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூர், சுன்னாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, மல்லாகம், வலிகிழக்கு, கட்டைவேலி, பருத்தித்துறை, புலோலி, உடுப்பிட்டி, சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, சாவகச்சேரி, தென்மராட்சி கிழக்கு, மேற்கு, காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, நயினதீவு, நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவத்தின் கீழ் இயங்கும் கிராம வங்கிகளில் இவர்கள் சுலபமாகத் தத்தம் ஒய்வூதியங்களைப் பெறலாம்.

## அகதி முகாமில் இருந்தவர்கள் விசாரணையில்

திருகோணமலை, பெப், 19

நிலாவெளி அகதிமுகாமில் இருந்து 16 தமிழர்களை பாதுகாப்புப் படையினர் விசாரணைக்காகக் கைது செய்தனர்.

விசாரணை முடிவடைந்த பின்னர் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் கடந்த திங்களன்று நடந்தது.

அனைவரும் தாக்குதல் காயங்களுடன் வீடு திரும்பினராம்.

## வெடிமருந்துடன் கார் அகப்பட்டது

திருகோணமலை, பெப். 19

கன்னியாவிற்கு அருகில் வைத்து வெடிமருந்துகளுடன் வாடகைக்கார்ஒன்று கைப்பற்றப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திங்களன்று இச்சம்பவம் நடந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிபோன் பேச
☎
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலி: 25088 (6 தொடர்புகள்)

# உதயன்

19 02 1986

ரெலிபோன் வாங்க
☎
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலி: 25088 (6 தொடர்புகள்)

# செஞ்சிலுவை பிராந்தியக் கிளை நிறுவக் கோரிக்கை

## அன்னையர் முன்னணி மகஜர்

யாழ்ப்பாணம், பெப் 19
இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்தியக் கிளை ஒன்றை அமைக்கவும்.

அன்னையர் முன்னணி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

கோரிக்கை அடங்கிய மகஜர், திருமதி பெனிலோப் விடுதலை சம்பந்தமாக யாழ்ப்பாணம் வந்திருந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி சன்ட்ரா சிங்கரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்துக்குச் செல்வி சன்ட்ரா சிங்கர் வந்தபோதே அவரிடம் பிரஸ்தாப மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பயங்கரவாதத்தை ஒழிக்கிறோம் என்ற போர்வையில் வடகிழக்குப் பிரதேசங்களில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அப்பாவி மக்களின் உயிர்கள், உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கப்படுகிறது. பாதுகாப்பு படைவீரர்களின் அத்துமீறல்களைப் பற்றி அரசு கவலைப்படுவதாக இல்லை, உரிய நடவடிக்கை எடுப்பதும் இல்லை, அரசு இனவொழிப்பு முயற்சியில் ஈடுபடுவதாக அஞ்ச வேண்டி உள்ளது

மிகவும் பாதிக்கப்பட்டு உள்ள கிழக்கு மாகாணத்தில் செஞ்சிலுவைச் சங்கக் கிளை இல்லை, வடக்கில் ஒரு செஞ்சிலுவைச் சங்கக் கிளை இருப்பினும், இன்றைய சூழலில் ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதிய மருந்துகள் இல்லை — இப்படி இம்மகஜரில் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

### விவரம் சேகரிப்பு

நல்லூர், பெப் 19
கடந்த சனிக்கிழமை யாழ் கோட்டை கொடுப்பனவுக் காரியாலயத்திற்கு ஓய்வூதியம் பெறச் சென்று மரணமானவர்களினதும், காயமடைந்தவர்களினதும் விவரங்களை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சேகரிக்கிறார்.

# யுத்த பூமியில் 'ருக்கிங்' களியாட்டம் தேவையா?

## கண்டனப் பிரசுரம்

யாழ்ப்பாணம், பெப்.19
ருக்கிங் என்பது பல்கலைக்கழக மாணவர்களின் ஒரு பண்பாட்டு அம்சமா?

ருக்கிங்கால் பாதிக்கப்பட்ட யாழ் பல்கலைக் கழக முதல்வருட மாணவர்களால் வெளியிடப்பட்டு உள்ள பிரசுரம் ஒன்றில் இவ்வாறு கேட்கப்பட்டு உள்ளது.

இப்பிரசுரத்தில் மேலும் பின்வருமாறு கூறப்பட்டு உள்ளது:-

எமது பல்கலைக்கழகத்தில், எல்லா வருடங்களையும்போல இம்முறையும் இந்த ருக்கிங் மிகவும் "கோலாகலமாக" நடத்தப்படுகிறது. "கம்பஸ்" என்றால் இப்படித்தான் என்று கூறி இதே நடைமுறைகள் தொடர்ச்சியாக வருடா வருடம் நடந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் அதுவும் தமிழ் மக்கள் மீது தினமும் உயிர்ப் படுகொலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்த பூமியில் மிகவும் களிப்பு ஊட்டும் விழாவாக நடைபெறுகிறது.

உங்களிடம் வரும் புதிய மாணவர்கள் அடிமைகளாக நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படி ஒற்றுமைக்கு வழி வகுக்கும். அடக்குபவனும், அடக்கப்படுபவனும் ஒற்றுமையாக இருக்க முடியுமென்றால் எமது மக்களின் இன்றைய போராட்டத்துக்கு ஏது அர்த்தம்?

சக மாணவர்களின் சனநாயக உரிமைகளை மறுத்து வதை செய்வது எந்த விதத்தில் சரியானது?

இவ்வாறு அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டரங்கு

# யாழ். இந்து பெருவெற்றி

## அபியின் அபார பந்து வீச்சு!

### 39 ஓவர்களில் முடிவடைந்த ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப் 19
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணி இந்த வருட கிரிக்கெட் 'சீசனை' பெரு வெற்றியுடன் ஆரம்பித்தது.

யாழ் இந்து இளைஞர் அணி நேற்று மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் ஆட்டத்தில் படுதோல்வி அடையச் செய்து தன்னுடைய முதல் வெற்றியை பதிவு செய்து கொண்டது.

இந்துக் கல்லூரி பந்து வீச்சாளர் பொன்னுத்துரை பிரபாநந்தனின் (அபி) பந்து வீச்சினால் நேற்றுக்காலை ஆரம்பமான ஆட்டம் மதிய போசன இடைவேளையுடனேயேமுடிவடைந்து விட்டது.

இரு அணிக்கும் தலா 50 ஓவர்கள் (மொத்தம் 100 ஓவர்கள்) வழங்கப்பட்டிருந்த போதிலும் அபியின் அபார பந்து வீச்சினால் மொத்தம் 39 ஓவர்களில் ஆட்டம் முடிந்து விட்டது.

யாழ் இந்து மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் மானிப்பாய் அணி துடுப்பெடுத்தாடியது.

அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்த அந்த அணி 21.4 ஓவர்களில் 71 ஓட்டங்களை மட்டும் பெற்று சரிந்தது.



அபி

புவனேந்திரன், ரகுமார், பவானந்தன் ஆகியோர் முறையே 11, 12, 20 ஓட்டங்களைப் பெற்றனர்.


யாழ் இந்து தரப்பில் பி பிரபாநந்தன் (அபி) தனக்கு ஒதுக்கப்பட்ட 10 ஓவர்களில் 39 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து அணி 18 5 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 75 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

யாழ் இந்து அணித் தலைவர் எஸ். இராமகிருஷ்ணன் 20 ஓட்டங்களையும் எஸ். சிறீகாந்தன், பிரபாநந்தன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 25, 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

மானிப்பாய் இந்து பந்து வீச்சாளர் சுதர்சன் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

யாழ் இந்து அணி எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியுடன் சென் பற்றிக்ஸ் புதிய மைதானத்தில் சிநேக பூர்வமான ஆட்டம் ஒன்றில் போதவிருக்கிறது.



சங்கிலியன் புனர் வாழ்வு முகாமில் வைத்து விடுவிக்கப்பட்ட பிரிட்டிஷ் பெண் திருமதி வில்லிஸ் பெனிலோப், பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளர் திரு. மக்டோமெட்டுடன் உரையாடிக் கொண்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்.

## பிரிட்டிஷ் பெண்மணி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
கை அரச படைக்கு வேவு பார்க்க வந்த ஒரு உளவாளி எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

திருமதி வில்லிஸை விடுவிப்பதற்கு ஈரோஸ் விடுத்த நிபந்தனையை அடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி சன்ட்ரா சிங்கரும், பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளர் திரு அலஸ்டெயர் ரி. மக்டோமெட்டும் யாழ்ப்பாணம் வந்தனர்.

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) யாழ் நகர் வந்த இந்த இருவரும் கோட்டை இராணுவ முகாமிலிருந்து சற்றுத் தொலைவில் இருக்கும் அசோக் ஹோட்டலில் தங்கியிருந்தனர்.

திருமதி வில்லிஸ் சங்கிலியன் புனர்வாழ்வு முகாமில் விடுதலை செய்யப்படுவார் என்ற தகவல் அறிந்து அங்கு சென்று காத்திருந்தோம்.

### வந்தது கார்

பிற்பகல் 3-15 மணிக்கு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் பக்கம் பக்கமாக முன்னுக்கு வர ஒரு வெள்ளை 'வொக்ஸ்வாகன்' கார் ஒன்று முகாம் வாசலுக்கு வந்து நின்றது காருக்கு பின்னால் மினிபஸ் ஒன்றும் வந்தது

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களும், மினி பஸ்ஸில் வந்தவர்களும் ஆயுதங்கள் வைத்திருக்கக் காணப்பட்டனர்.

காரில் திருமதி வில்லிஸ் இருந்தார். காருக்குள் வேறு மூன்று இளைஞர்கள் ஆயுதங்களுடன் காணப்பட்டனர்.

காருக்கோ அல்லது மினிவானுக்கோ அல்லது மோட்டார் சைக்கிள்களுக்கோ இலக்கத் தகடுகள் காணப்படவில்லை.

### காவல்

வாகனங்கள் முகாம் வாசலில் நின்றதும் முகாம் இருந்த பகுதியைச் சூழ இளைஞர்கள் கடும் காவல் புரிந்தனர்

ஆங்காங்கே சுவர் மறைவுகளிலும், வேலி ஓரங்களிலும் ஆயுதங்களுடன் இளைஞர்கள் நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது

திருமதி வில்லிஸ் காருக்குள் தமக்கு வெயில் படுவதாக கார்ச் சாரதியிடம் தெரிவித்தார். அதனையடுத்து முகாமுக்கு முன்னால் வீதியில் நிழலான ஒரு பகுதிக்கு கார் கொண்டு செல்லப்பட்டது.

### அடுத்த மினிவானில்...

சரியாக 3-45 மணிக்கு மற்றொரு மினிவான் முகாம் வாசலில் வந்து நின்றது.

அதிலிருந்து திரு. மக்டோமெட், செல்வி. சன்ட்ரா சிங்கர் ஆகியோரும் சில இளைஞர்களும் இறங்கினார்கள்.

இதனையடுத்து முகாம் வாசலில் காரை விட்டு இறங்கிய திருமதி வில்லிஸ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி சன்ட்ரா சிங்கரிடமும், தூதரக அதிகாரி திரு. மக்டோமெட்டிடமும் உத்தியோக பூர்வமாக ஒப்படைக்கப்பட்டார்

ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் கண்ணாடி அணிந்த இளைஞர் ஒருவர் திருமதி வில்லிஸை அவர்களிடம் ஒப்படைத்தார்.

### அன்பளிப்பு

இதன் பின்னர் அவர்கள் மூவரும் இளைஞர்கள் சகிதம் அகதிகள் முகாமுக்குள் அழைத்து வரப்பட்டனர்.

அங்கு வைத்து அவர்களுக்கு தேநீர் வழங்கப்பட்டது.

அப்போது ஈரோஸ் [illegible] தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருள்கள் சிலவற்றை அவர்கள் மூவருக்கும் பரிசுப் பொருள்களாக வழங்கினர்.

### கேள்விக் கணைகள்

இவ்வேளையில் செய்தியாவர்கள் திருமதி. வில்லிஸிடம் அடுத்தடுத்துகேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

"உங்கள் அனுபவம் எப்படி?" உங்களை கடத்தியவர்கள் உங்களை எப்படி நடத்தினார்கள்? தமிழர் பிரச்சினைபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்" — இப்படியான கேள்விக்கணைகளை செய்தியாளர்கள்தொடுத்தனர்.

கேள்விகளைப் புரிந்து கொண்ட திருமதி வில்லிஸ் அவற்றிற்கு பதில் கூற முயற்சித்தார்.

### குறுக்கீடு

அப்போது பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளர் திரு மக்டோமெட் குறுக்கிட்டார்.

திருமதி வில்லிஸோ அல்லது நானோ அல்லது செல்வி. சன்ட்ரா சிங்கரோ பத்திரிகையாளருடன் பேசுவது தவறு. விடுவிப்புத் தொடர்பான நிபந்தனைகளை அது மீறுவதாக அமையும். செஞ்சிலுவைச் சங்க சட்டங்களையும் அது மீறுவதாகும் அதனை நான் அனுமதிக்க மாட்டேன் என்று பதிலிறுத்தார்.

### வைத்திய அத்தியட்சகர் வந்தார்

இதன் பின்னர் 4·30 [illegible] அத்தியட்சகர் திரு. [illegible] இனியன் அங்கு வந்தார். திரு. மக்டோமெட் கைகுலுக்கி அவரை வரவேற்றார்.

"நீங்கள் செய்த உதவிக்கு என்றும் நன்றியுடையேன்" என்று மக்டோமெட் அவரிடம் தெரிவித்தார்.

அதன் பின்னர் வெளிநாட்டவர் மூவரும் திரு. நச்சினார்க்கினியனுடன் அவர் வந்த ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வண்டியில் புறப்பட்டுச் சென்றார்கள்.

இதனையடுத்து அங்கு நின்ற ஈரோஸ் இயக்கப் பிரதிநிதிகள் செய்தியாளர்களுடன் பேசினர்.

### பலாலிக்கு

அம்புலன்ஸ் வண்டியில் சென்றவர்கள் பலாலி இராணுவ முகாமுக்குச் சென்றனர்.

இங்கு இராணுவ முகாம் வாசலில் வெளிநாட்டவர்மூவரும்இறக்கி விடப்பட்டார்கள்.

பலாலி விமானநிலையம் மூலமாக அவர்கள் மூவரும் உடனடியாக விமானத்தில் கொழும்பு புறப்பட்டுச் சென்றனர்.

## கொழும்பிலும்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டனர்

அவர்கள் குடியிருந்த வீட்டில் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 80 கிலோ கிராம் வெடி மருந்தும் கைப்பற்றப்பட்டது.

ஆயுதப் படையினரும் பொலீஸாரும் கூட்டாக நடத்திய தேடுதலின் போது இவர்கள் கைதாகினர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

இதேவேளை தீவிரவாத இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் வெள்ளவத்தையில் வவுனியாவைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். தம்பிராஜா இராமநாதன் என்ற பெயர் கொண்ட இந்த இளைஞர், மலையக வன்செயல்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

இவர் பற்றி மேல் விசாரணை நடத்தப்படுகின்றது

'முகமூடி' நேற்றுப் பகல் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குள்ளும் தலையாட்டியது.

இதனால் 4 ஆம் வார்ட்டில் நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர் ஒருவரைச் சுற்றி பலத்த பாதுகாவல் போடப்பட்டது.

அந்த இளைஞர் செங்கலடி வாசியாவர் கடுமையான காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட அவர் மயக்க நிலையில் உள்ளார்.

## ராஜீவ்

(1 ம்பக்கத் தொடர்ச்சி)
யுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியும் கூட இருந்தார்.

## எமக்கு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
கினால் தாம் அவர்களுக்குப் பணிந்து போய்விடுவதாகிவிடும் என்று அவர் அறிவித்தார்.

ஆனால் பின்னர் நடந்தது என்ன?

முதலில் மறைமுகமாக தம்முடைய நம்பிக்கையான வட்டாரங்கள் மூலம் எம்முடன் தொடர்பு கொண்டார். திருமதி வில்லிஸ் உயிருடன் இருக்கிறார் என்பதை உறுதி செய்து கொண்டார்.

எங்களது நிபந்தனைகளுக்கு அடிபணிந்தார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி இலங்கை வரவும் அவர்களை யாழ்ப்பாணம் அனுப்பவும் இணங்கினர்.

நாங்கள் இந்த விடயம் தொடர்பாக விடுத்த எந்த அறிக்கையையும் திரு அத்துலத் முதலி மறுக்கவில்லை; ஏற்றுக் கொண்டார்.

இந்த விடயத்தில் அவர் சத்தம் போடாமல் அதிகம் அலட்டாமல் ஒதுங்கியிருப்பது போல் பாசாங்கு பண்ணியது அவர் தோல்வியை ஏற்றுக்கொண்டார்என்பதற்குஅறிகுறி.

ஆரம்பத்தில் எம்மையும் பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் "கொழுவி" விட அவர் முயற்சித்தார். அதனால்தான் நாம் திரு மக்டொமெட் முதல் தடவை யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது அவரைச் சந்திக்க மறுத்தோம்; தவிர்த்தோம்.

வெளிநாட்டு உளவாளி என்பதனால் இந்தத் தடவை வில்லிஸை எச்சரித்து விடுவித்திருக்கிறோம். அவர் உள்ளூர் உளவாளியாக இருந்திருந்தால் அவருக்கு நடந்தது வேறாக இருக்கும். தகுந்த தண்டனை வழங்கியிருப்போம்.

### எச்சரிக்கை

இது வெளிநாட்டில் இருந்து வரக்கூடிய எல்லா உளவாளிகளுக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும் அடுத்த தடவை இப்படி ஒருவர் அகப்பட்டால் அவருக்கு நடப்பது வேறாக இருக்கும்.

### இராணுவ உளவாளி

திருமதி வில்லிஸிடமிருந்த குறிப்புகள் அவர் ஓர் இராணுவ உளவாளி என்பதை உறுதி செய்கிறது

இயக்கங்கள் பற்றி அவருக்கு பரந்த அறிவு இருக்கிறது.

அவரது குறிப்புப் புத்தகத்தில் "சிங்கள இளைஞர்களுக்கும் 'புளொட்' இயக்கத்திற்கும் என்ன தொடர்பு?" என்று ஒரு வினா குறிக்கப்பட்டு இருந்தது

உண்மையில் கிராம மட்டங்களில் இயக்கங்கள் எவ்வளவு தூரம் வேரூன்றியிருக்கின்றன? அவைகளுக்கும் மக்களுக்கும் இடையில் என்ன தொடர்பு?– போன்ற விடயங்களை ஆராயவே அவர் இங்கு வந்தார்.

"ஈழம்" பகுதிக்குள் அவரை நாங்கள் தடுத்து வைக்கவில்லை. வெளியே தடுத்துவைத்தோம். எங்கு பாதுகாப்போ அங்கு வைத்திருந்தோம்.

ஆனால், தான் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது திருமதி வில்லிஸுக்கு தெரியாது –என்றார்.

## அரசின்- -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
ரப் பகிர்வு சம்பந்தமாக தமது அரசு தற்போது எடுத்திருக்கும் நிலையை விளக்கியதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

திரு ராஜீவ் காந்திக்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கும் புதிய நிலையைத்தான் ஜனாதிபதி ஜெயவர்த்தன, நாடாளுமன்றத்தில் நாளை தெரிவிப்பார் என்று தெரிகிறது.

மாவட்டசபை, விரும்பிய சபைகள் மாகாண சபைகளாக இயங்கலாம் – என்ற அடிப்படையில் தான் புதிய நிலையும் அமைந்து இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்

## பூநகரியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இருந்தார்கள்.

அச்சமயம் போராளிகள் பதுங்கி இருந்து தாக்குதல் நடத்தினர்களாம்.

அச்சமயமே சிப்பாய் ஒருவர் மரணமானார் என்றும் நால்வர் காயமடைந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

ஹெலிக்கொப்டர் இரண்டொரு முறை அந்த முகாமிற்கு வந்து திரும்பிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

## இனப் பிரச்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
புரிபவர், சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைவராகப் பணியாற்றிய திரு. மார்ட்டின் என்னஸ் என்பவர்.

செல்வி யூடித் ஹார்ட் நேற்று இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிற்றைச் சந்தித்து உரையாடினார்.

அரசு முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேசினார்.

இன்று பிற்கல் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வத்தைச் சந்தித்துப் பேசுவார்.

இலங்கையில் மனித உரிமைப் பிரச்சினைகள், அகதிகளுக்கு உதவுவது சம்பந்தமாகவே இக்குழு ஆய்வு நடத்துகின்றது

யாழ்.இந்து ஆசிரியர் கழகம்

சகல ஆசிரியர்களுக்கும்
முன்னாள் ஆசிரியர்களுக்கும்,
பழைய மாணவர்களுக்கும்,

எமது முன்னாள் அதிபர் திரு. பொ. ச. குமாரசுவாமியின் தாயார் திருமதி சங்கரப்பிள்ளை நேற்று சிவபதமடைந்தார்.

இன்று பிற்பகல் 2-30 மணிக்கு 56/1 இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை இல்லத்தில் நடைபெறும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

செயலாளர்
யாழ் இந்து ஆசிரியர் கழகம்

31 ஆவது நினைவு அஞ்சலி



கந்தசாமி மயூரன் (பாபு)
தோற்றம்: 18 - 04 - 1978
மறைவு: 20 - 01 - 1986

அன்பு மலர் காவில் அரும்பினால் புது மலராய் இன்ப ஒளி வீசி எமையெல்லாம் வலம் வந்தாய் துன்பம் என்ன என்று தோன்றாப் பருவத்தில் தூதுவைத்து அந்தகனும் தூக்கி உயிர் சென்றுவிட்டான்.

பிரிவால் வாடும்
செ. கந்தசாமி குடும்பத்தினர்.
28/7 முதலியார் லேன்
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 19 2 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org